தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2015

ஆண்டு: 6 திகதி: 13.06.2015

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி தே. குலராஜா

மாணவர் பெயர்:

________________________________

**வினா 1: தரப்பட்ட உரைப்பகுதியை வாசித்து, அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. (15 புள்ளிகள்)**

## விடா முயற்சி

ஒரு செயலில் வெற்றி பெற வேண்டுமாயின் அதற்கு முயற்சி தேவை. எடுத்த முயற்சியை இடையில் நிறுத்திவிடாது தொடர்ந்து செய்து முடிப்பதே விடாமுயற்சியாகும். முயற்சி திருவினையாக்கும் என்றார் வள்ளுவர். 'எதனையும் நான் திடீரென்று கண்டுபிடிக்கவில்லை. பல்லாண்டுகளாக ஊன் உறக்கமின்றி உழைக்க உதவி செய்தது எனது விடாமுயற்சிதான்' என்று தோமஸ் அல்வா எடிசன் (Thomas Alva Edison) கூறுகிறார். மனவலிமையுடன் நாம் ஒரு காரியத்தைச் செய்ய முனையும்போது அதில் நாம் வெற்றியைக் காணலாம். இதனை உணர்த்தவே 'ஔவையார் ஊக்கமது கைவிடேல்' என்றார்.

றொபேட் புரூஸ் ( Robert Bruce) என்பவன் ஸ்கொட்லாந்து தேசத்து அரசன். அவன் ஒரு முறை அயல்நாட்டு மன்னனுடன் போர் செய்ய நேரிட்டது. போரில் அவன் தோற்றுவிட்டான். அவனது விடாமுயற்சி அவனைத் தொடர்ந்தும் போர் செய்ய உதவியது. அவன் இவ்வாறு ஆறு முறை போர் செய்து ஆறு முறையும் தோற்றுவிட்டான். மிகுந்த கவலையுடன் தன் இருக்கையில் அமர்ந்து தனது எதிரியை எவ்வாறு வெற்றிகொள்ளலாம் என சிந்தித்துக் கொண்டிருந்தான். அவ்வேளையில் சுவரில் ஒரு சிலந்தி தனது கூட்டை அமைக்க முயற்சி செய்துகொண்டிருந்ததை அவதானித்தான். சிலந்தி ஆறுமுறை பாய்ந்தும் கீழே விழுந்து விட்டதால் கூட்டை அமைக்க முடியவில்லை. எழாவது முறை முயற்சித்த போது அதனால் கூட்டை அமைக்க முடிந்தது. றொபேட் புரூஸ் உற்சாகமடைந்தான். எதிரியைத் தோற்கடித்து வெற்றி பெற்றான். "முயற்சி திருவினையாக்கும்".

1. விடா முயற்சி என்பது என்ன? (2 புள்ளிகள்)

........................................................................................................................................

........................................................................................................................................

2. தோமஸ் அல்வா எடிசன் என்ன கூறினார்? (2 புள்ளிகள்)

........................................................................................................................................

........................................................................................................................................

3. 'ஊக்கமது கைவிடேல்' என்று கூறியவர் யார்? (2 புள்ளிகள்)

........................................................................................................................................

4. றொபேட் புரூஸ் எந்த நாட்டு மன்னர்? (2 புள்ளிகள்)

......................................................................................................................................................

5. றொபேட் புரூஸ் ஏழாவது முறை போரில் வெற்றி பெறக் காரணமாக அமைந்தது என்ன? (2 புள்ளிகள்)

......................................................................................................................................................

......................................................................................................................................................

6. எதிர்ச்சொல் தருக (5 புள்ளிகள்)

வெற்றியடைந்தான் - ...............................................................

உறக்கம் - ...............................................................

கவலையுடன் - ...............................................................

உற்சாகமடைந்தான் - ...............................................................

எதிரி - ...............................................................

**வினா 2. பின்வரும் கூற்றுகளில் 'அ' பகுதியில் உள்ள கூற்றுகளுக்குப் பொருத்தமானதை 'ஆ' பகுதியில் இணையுங்கள். (5 புள்ளிகள்)**

| அ | ஆ |
|---|---|
| 1. எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் | சான்றோன் எனக்கேட்ட தாய் |
| 2. கற்க கசடறக் கற்பவை கற்றபின் | குறைவற்ற செல்வம் |
| 3. நோயற்ற வாழ்வே | சிலையில் எழுத்து |
| 4. ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை | நிற்க அதற்குத் தக |
| 5. இளமையிற் கல்வி | மங்காத் தமிழ் என்று சங்கே முழங்கு |

**வினா 3. கீழே உள்ள சொற்களுக்குப் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் அமையுங்கள். (20 புள்ளிகள்)**

1. படி -

பெயர்: ..............................................................................................................

..............................................................................................................

வினை: ..............................................................................................................

..............................................................................................................

2. ஓடு -

பெயர்: ..............................................................................................................

..............................................................................................................

வினை: ..............................................................................................................

..............................................................................................................

3. ஊர் -

பெயர்: ..............................................................................................................

..............................................................................................................

வினை: ..............................................................................................................

..............................................................................................................

4. அறை -

பெயர்: ..............................................................................................................

..............................................................................................................

வினை: ..............................................................................................................

..............................................................................................................

5. மடி

பெயர்: ..............................................................................................................

..............................................................................................................

வினை: ..............................................................................................................

..............................................................................................................

**வினா 4. கண்ணன் என்ற சொல்லை பொருத்தமாக வைத்து வாக்கியங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புங்கள். (10 புள்ளிகள்)**

1: .................................................................. ஒரு பொம்மைத் தொழிற்சாலையில் வேலை செய்கிறான்.

2. .................................................................. பல தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

3. .................................................................. எந்த வேலையையும் எளிதில் செய்ய முடியும்

4. அதனால் அங்குள்ள அனைவருக்கும் .................................................................. மிகவும் பிடிக்கும்.

5. .................................................................. முன்னேற்றத்தைக் கண்டு எல்லோரும் அவனைப் பாராட்டினார்கள்.

**வினா 5. அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகமாகிய கங்காருவைப் பற்றி வெளிநாட்டில் இருக்கும் உமது உறவினருக்கு 50 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக. (15 புள்ளிகள்)**

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

**வினா 6. ஆரம்பிக்கப்பட்ட கதையை உங்கள் கற்பனையில் எழுதி நிறைவு செய்யுங்கள். உங்களது ஆக்கம் 50 சொற்களுக்குக் குறையாது அமைதல் வேண்டும். (15 புள்ளிகள்)**

பாடசாலை விடுமுறை வந்தது. நாங்கள் குடும்பமாக விடுமுறையைக் கழிப்பதற்கு வெளிநாடு செல்ல ஆயத்தமானோம். காலை பதினொரு மணிக்கு புறப்படும் விமானத்திற்கெனப் பயணச்சீட்டு வாங்கினோம். இரண்டு மணி நேரத்திற்கு முன் நாங்கள் விமான நிலையத்தில் நிற்க வேண்டும். எங்களது மாமாவின் மோட்டார் வண்டியில் பயணப் பெட்டிகளை ஏற்றி, காலை ஏழு மணிக்கே மகிழ்ச்சியுடன் புறப்பட்டுவிட்டோம். எமது வீட்டில் இருந்து அரை மணி நேரம் விமான நிலையத்தை அடையப் போதும். விமான நிலையத்தை அடைய இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருக்கையில் திடீரென எமது வாகனத்தின் முன்னே சென்ற வாகனம் பெரும் விபத்துக்குள்ளாகியது. பாதைகள் மூடப்பட்டன. நேரம் காலை பத்து மணியாகிவிட்டது. வாகனம் நகர முடியவில்லை. ..............................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

வினா 7. பின்வரும் தலைப்பில் ஒன்றைத் தெரிவு செய்து நூறு சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

1. அவுஸ்திரேலிய தினம்
2. ஒற்றுமையே பலம்
3. அன்னையர் தினம்
4. அவுஸ்திரேலியாவில் குளிர் காலம்